2010 மே 12]
**173—**

### தரம் உயர்த்துதல்

***12188—திரு. அர. சக்கரபாணி:**

*மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) ஒட்டன்சத்திரம் தொகுதி, இடையக்கோட்டை அரசு ஆரம்ப சுகாதார நிலையத்தைத் தரம் உயர்த்தும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) திண்டுக்கல் மாவட்டம், பழனி சுகாதார மாவட்டம், ஒட்டன்சத்திரம் ஊராட்சி ஒன்றியத்தில், கே. கீரனூரில் ஒரு முதன்மை ஆரம்ப சுகாதார நிலையமும், சத்திரப்பட்டி, இடையக்கோட்டை மற்றும் கேதையிரும்பு ஆகிய இடங்களில் கூடுதல் ஆரம்ப சுகாதார நிலையங்கள் செயல்பட்டு வருகின்றன. அரசின் கொள்கைப்படி, ஊராட்சி ஒன்றியத்திற்கு ஒரு தகுதி வாய்ந்த ஆரம்ப சுகாதார நிலையத்தைப் படிப்படியாகத் தரம் உயர்த்த நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. இடையக்கோட்டை அரசு ஆரம்ப சுகாதார நிலையத்தைத் தரம் உயர்த்த தற்போது சாத்தியக்கூறுகள் இல்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. அர. சக்கரபாணி.

**திரு. அர. சக்கரபாணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திண்டுக்கல் மாவட்டம், இடையக்கோட்டையில் உள்ள ஆரம்ப சுகாதார நிலையமானது 1962 ஆம் ஆண்டு ஜில்லா போர்டு dispensary-யாக ஆரம்பிக்கப்பட்டு, 1987 ஆம் ஆண்டு அது ஆரம்ப சுகாதார நிலையமாகத் தரம் உயர்த்தப்பட்டு, இப்போது செயல்பட்டு வருகிறது. அங்கே ஒரே ஒரு மருத்துவர் மட்டும்தான் பணிபுரிந்து வருகிறார். அங்கே தாழ்த்தப்பட்ட, பிற்படுத்தப்பட்ட மக்கள், இஸ்லாமிய பெருமக்கள் அதிகமாக வசித்து வருகிறார்கள். அங்குள்ள மக்கள் மேல் சிகிச்சைக்காக

மருத்துவமனைக்குச் செல்ல வேண்டும் என்று சொன்னால், ஒட்டன்சத்திரத்திற்குத்தான், அதாவது 25 கிலோ மீட்டர் தூரம் செல்ல வேண்டிய சூழ்நிலை இருக்கிறது. ஒட்டன்சத்திரம் ஊராட்சி ஒன்றியத்தைப் பொறுத்த வரையிலே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொன்னதைப்போல கே. கீரனூர், இடையக்கோட்டை, கேதையிரும்பு, சத்திரப்பட்டி ஆகிய நான்கு ஆரம்ப சுகாதார நிலையங்கள் உள்ளன. அங்கே அந்த 4 ஆரம்ப சுகாதார நிலையங்கள் எதுவுமே தரம் உயர்த்தப்படாமல் செயல்பட்டு வருகின்றன. மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் இந்த ஆண்டு மக்கள் நல்வாழ்வுத் துறை மானியக் கோரிக்கையில் தமிழகத்தில் 40 ஆரம்ப சுகாதார நிலையங்கள், 30 படுக்கைகள் கொண்ட மருத்துவமனைகளாகத் தரம் உயர்த்தப்படும் என்று அறிவித்து இருக்கிறார்கள். அந்த 40-ல் ஒன்றை இடையக்கோட்டைக்குத் தந்து, இந்த ஆண்டு அங்கே உள்ள ஆரம்ப சுகாதார நிலையத்தை 30 படுக்கைகள் கொண்ட மருத்துவமனையாகத் தரம் உயர்த்துவதற்கு நடவடிக்கை எடுப்பார்களா என்பதைத் தங்கள்வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்டது கடந்த ஆண்டே அவர்களது தொகுதியில் தரம் உயர்த்தப்பட்டுவிட்டது. இந்த ஆண்டு 40 ஆரம்ப சுகாதார நிலையங்கள் தரம் உயர்த்தப்படும் என்று அறிவிக்கப்பட்டிருக்கிறது. அரசினுடைய கொள்கையின்படி, ஊராட்சி ஒன்றியத்திற்கு குறைந்தது ஒரு ஆரம்ப சுகாதார நிலையம் 30 படுக்கைகள் கொண்ட மருத்துவமனைகளாக, படிப்படியாகத் தரம் உயர்த்தப்படுகிறது. இதுவரையில், இந்தக் கழக அரசு பொறுப்பேற்ற பிறகு, கடந்த 4 ஆண்டு காலத்தில், 2007-ல் 75 ஆரம்ப சுகாதார நிலையங்கள் தரம் உயர்த்தப்பட்டிருக்கின்றன. 2008-ல் 50 ஆரம்ப சுகாதார நிலையங்கள் தரம் உயர்த்தப்பட்டிருக்கின்றன. அதேபோல், இந்த ஆண்டு 40-ம், ஆக மொத்தம் 165 ஆரம்ப சுகாதார நிலையங்கள் கடந்த 4 ஆண்டு காலத்தில் தரம் உயர்த்தப்பட அனுமதி வழங்கப்பட்டிருக்கின்றது. ஆகையால், முடிந்தால், மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கை, விதிமுறைகளுக்கு உட்பட்டு பரிசீலிக்கப்படும். ஒட்டன்சத்திரம்

2010 மே 12]

ஒன்றியத்தில் சில மாதங்களுக்கு முன்பு மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்கள் ரூ.2 கோடி மதிப்பீட்டில் மருத்துவமனைக் கட்டடங்களை திறந்து வைத்திருக்கிறார்கள். அவை மக்களுடைய பயன்பாட்டில் இருக்கின்றன. அதைப்போல், 12 கிலோ மீட்டர் தூரத்தில் பள்ளபட்டி அரசு மருத்துவமனை இயங்கி வருகிறது. மேலும் தேவை என்று மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்கிறார்கள். அது பரிசீலிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. அர. சக்கரபாணி.

**திரு. அர. சக்கரபாணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொன்னதுபோல், ஒட்டன்சத்திரத்தில் உள்ள அரசு மருத்துவமனையை விரிவாக்கம் செய்கின்ற வகையிலே ரூபாய் இரண்டு கோடி அளவிற்கு நிதி ஒதுக்கீடு செய்து, அதனைத் தொடர்ந்து அங்கே பணிகள் எல்லாம் முடிவுற்று கட்டடங்கள் கட்டப்பட்டு, கூடுதலான மருத்துவர்களை நியமித்து, நல்ல முறையில் இயங்கிக்கொண்டு வருகிறது. அதற்காக இந்த நேரத்திலே முத்தமிழ் அறிஞர் மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்களுக்கும், மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்களுக்கும், மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்களுக்கும் எங்கள் மாவட்ட அமைச்சர் அண்ணன் திரு. ஐ. பெரியசாமி அவர்களுக்கும் நன்றியினைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 9-50

அந்த ஒன்றியத்தைப் பொறுத்த அளவிலே, 4 ஆரம்ப சுகாதார நிலையங்களும் தரம் உயர்த்தப்படவில்லை. மாண்புமிகு அமைச்சரவர்கள் பரிசீலிப்பதாகச் சொல்லியிருக்கிறார்கள். மாண்புமிகு அமைச்சர் அவர்களைப் பொறுத்த அளவிலே, அவர் பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சராக இருந்த காலத்திலும் சரி; பத்திரப் பதிவுத் துறை அமைச்சராக இருந்த காலத்திலும் சரி; மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சராக இருக்கின்ற காலத்திலும் சரி, நாங்கள் கேட்கின்ற கோரிக்கைகளையெல்லாம் நிறைவேற்றித் தந்திருக்கிறார்கள். கண்டிப்பாக அவர் இப்போதும் நிறைவேற்றுவார் என்ற நம்பிக்கை எங்களுக்கு இருக்கிறது. மேலும், அந்த ஆரம்ப சுகாதார



GISLATIVE TRUTH ALONE TRIUMPHS வாய்மையே வெல்லும்

நிலையத்திலே ஓர் ஆண் மருத்துவர் மட்டும்தான் பணிபுரிந்து வருகின்றார். அங்கே பெண் மருத்துவர் இல்லை. பெண்கள் மருத்துவச் சிகிச்சைக்குச் செல்ல வேண்டுமென்றால் மிகவும் சிரமப்படுகின்றார்கள். ஆகவே பெண்களின் நலன் கருதி, மாண்புமிகு அமைச்சரவர்கள் அங்கே பெண் மருத்துவரை உடனடியாக நியமிப்பதற்கு நடவடிக்கை எடுப்பார்களா என்பதைத் தங்கள்மூலம் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள்.*

**மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம்:** *மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இந்த அரசு செய்த சாதனைகளையெல்லாம் இங்கே எடுத்துக் கூறினார்கள். அவரே பதிலையும் சொல்லியிருக்கிறார். பெண் மருத்துவர் வேண்டுமென்று கேட்டிருக்கிறார். யாராவது கேட்டால், நாங்கள் மாறுதல் கொடுப்பதற்குத் தயாராக இருக்கிறோம். கிட்டத்தட்ட 23 மருத்துவமனைகளுக்கு நேர்காணல் அழைப்பு விடுத்து, 6 ஆயிரத்திற்கும் மேற்பட்ட மருத்துவர்களை நியமித்திருக்கிறோம். ஒரு மருத்துவர் பணிபுரிகின்ற மருத்துவமனைகள் கிட்டத்தட்ட 243 இருக்கின்றன. இந்த ஆண்டுகூட ஒரு மருத்துவர் பணிபுரிகின்ற ஆரம்ப சுகாதார நிலையங்களில் இரண்டு மருத்துவர்களை நியமிப்பதற்காக மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்கள் அனுமதி தந்திருக்கிறார்கள். அதன் அடிப்படையில் மாண்புமிகு உறுப்பினருடைய கோரிக்கை நிறைவேற்றப்படும்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு உறுப்பினர் திருமதி பெ. பிரபாவதி.*

**திருமதி பெ. பிரபாவதி:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருப்பூர் மாவட்டம், தாராபுரம் வட்டத்திற்கு உட்பட்ட மடத்துக்குளம் ஒன்றியம், கன்னியூர் அரசு ஆரம்ப சுகாதார நிலையத்தை 30 படுக்கைகள் கொண்ட மருத்துவமனையாகத் தரம் உயர்த்த அரசு ஆவன செய்யுமா என்பதைப் பணிவோடு கேட்டு, அமர்கிறேன்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள்.*

2010 மே 12]

**மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. அர. சக்கரபாணி அவர்களுக்குக் கூறிய அதே பதில்தான் இவருக்கும் பொருந்தும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா வரிசை எண் 174, மாண்புமிகு உறுப்பினர் திரு. வே. மாரிமுத்து, மாண்புமிகு வருவாய் மற்றும் வீட்டு வசதித் துறை அமைச்சர் அவர்கள்.

**174—**

**கட்டட வசதி**

***59281—திரு. வே. மாரிமுத்து:**

மாண்புமிகு வருவாய் மற்றும் வீட்டு வசதித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நாகப்பட்டினம் வட்டாட்சியர் அலுவலகத்திற்குப் புதிய கட்டடம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**மாண்புமிகு திரு. இ. பெரியசாமி, வருவாய் மற்றும் வீட்டு வசதித் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) தற்போதுள்ள நாகப்பட்டினம் வட்டாட்சியர் அலுவலகம் போதுமான இட வசதியுடனும், அடிப்படை வசதியுடனும் ஒருங்கிணைந்து அமையப் பெற்று நல்ல நிலையில் உள்ளது. எனவே, புதிய கட்டடம் கட்ட வேண்டிய அவசியம் தற்போது எழவில்லை.

(ஆ) வினா எழவில்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. வே. மாரிமுத்து.

**திரு. வே. மாரிமுத்து:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நாகை வட்டம், 85 வருவாய் கிராமங்களைக் கொண்ட வட்டமாகும். நாகப்பட்டினம் வட்டாட்சியர் அலுவலகம், மாவட்டத் தலைநகரமான நாகப்பட்டினத்திலே இயங்கிக் கொண்டிருக்கின்றது. அது 150 ஆண்டு காலப் பழமையான